TAMILTH Madurai 1 Regional_02 232402
© 2006-2017 Kasturi & Sons Ltd. - -shanmugam.k@thehindutamil.co.in -

சின்னச் சின்னதாய்...

ஆண்டு முழுவதும் ஜல்லிக்கட்டு நடத்த கோரிய மனு தள்ளுபடி

மதுரை: சிவகங்கை மாவட்டம், உலகம்பட்டி ஆவுடையப்பன் உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனு:
சிங்கம்புணரி அருகே அடைக்கலம் காத்த அய்யனார் கோயில் திருவிழாவில் ஜூலை மாதம் வடமாடு மஞ்சு விரட்டு நடைபெறும். இதற்கு அனுமதி கோரி மனு அளித்தோம். ஆனால், ஆண்டுதோறும் ஜனவரி முதல் மே மாதம் வரை தான் மஞ்சுவிரட்டு, ஜல்லிக்கட்டுக்கு அனுமதி வழங்கப்படும் என்று கூறி அனுமதி வழங்க மறுத்து விட்டனர். எனவே, ஜனவரி முதல் மே வரை தான் ஜல்லிக்கட்டு நடத்த வேண்டும் என்ற காலவரம்பை மாற்றி, ஆண்டு முழுவதும் ஜல்லிக்கட்டு நடத்த உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.
இந்த மனு தலைமை நீதிபதி ஏ. பி. சாஹி மற்றும் சுப்பிரமணியம் பிரசாத் அமர்வில் விசாரணைக்கு வந்தது.
இவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பாக அரசின் கொள்கை முடிவு. அதில் தலையிட முடியாது என்றனர். இதையடுத்து மனுதாரர் மனுவை திரும்பப் பெறுவதாகத் தெரிவித்தார். அதற்கு அனுமதி வழங்கி மனுவை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

சித்திரைத் திருவிழா தேரோட்டத்துக்காக ரூ. 70 லட்சத்தில் மாசி வீதிகள் சீரமைப்பு

மதுரை: மீனாட்சியம்மன் கோயில் சித்திரைத் திருவிழா தேரோட்டத்துக்காக மாசி வீதிகள் ரூ. 70 லட்சத்தில் சீரமைக்கப்படுகின்றன.
தற்போது மாசி வீதிகளில் ஸ்மார்ட் சிட்டி பணிகள் நடைபெறுகின்றன. இதற்காக வீதி முழுவதும் குழிகள் தோண்டப்பட்டு முற்றிலும் சிதிலம் ஆகியுள்ளது. இதேநிலையில், மாசி வீதிகளில் தேரோட்டத்தை நடத்த முடியாது. இதனால் ரூ. 70 லட்சத்தில் மாசி வீதிகளைச் சீரமைக்க மாநகராட்சி முடிவு செய்துள்ளது.
இதுகுறித்து மாநகராட்சி ஆணையாளர் விசாகன் கூறியதாவது:
ஒவ்வொரு ஆண்டும் மாசி வீதிகளில் தேரோட்டத்துக்காக ரூ.30 லட்சம் செலவில் பேட்ஜ் ஒர்க் பார்க்கப்படும். தற்போது ஸ்மார்ட் சிட்டி திட்டத்துக்காக சாலைகளில் குழிகள் தோண்டப்பட்டுள்ளதால் சிதிலம் அடைந்துள்ளன. இதனால், தற்காலிகமாக ரூ. 70 லட்சத்தில் வீதிகள் சீரமைக்கப்படுகின்றன. ஸ்மார்ட் சிட்டி திட்டம் முடிந்ததும், இந்தச் சாலை நிரந்தரமாகப் புதுப்பிக்கப்படும். அதன்பிறகு, ஆண்டுதோறும் புதுப்பிக்க வேண்டிய அவசியம் இருக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

பேரையூர் அருகே நிலத் தகராறில் விவசாயியைக் கொன்ற இளைஞர் கைது

மதுரை: மதுரை மாவட்டம், பேரையூர் அருகிலுள்ள மேலப்பட்டியைச் சேர்ந்தவர் குமாரசாமி (59). இவரது தம்பி மகன் சிவமுத்து (35). இவர் அப்பகுதியிலுள்ள ஒருவரின் நிலத்தை குத்தகைக்கு பேசி விவசாயம் செய்தார். இந்த நிலத்தை குமாரசாமி தனது மகனுக்கு குத்தகைக்கு பெறுவதற்கு முயன்றார். இது தொடர்பாக குமாரசாமிக்கும், சிவமுத்துவுக்கும் தகராறு ஏற்பட்டது. இதில் சிவமுத்து அரிவாளால் வெட்டியதில் குமாரசாமியின் இடதுகை துண்டானது. இதில் ரத்தப் போக்கு அதிகரிப்பால், சிகிச்சை பலனின்றி அவர் இறந்தார். இது தொடர்பாக பேரையூர் போலீஸார் வழக்குப்பதிவு செய்து சிவமுத்துவைக் கைது செய்தனர்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் உப கோயில்கள் உண்டியல் திறப்பு

மதுரை: மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், தெப்பக்குளம் மாரியம்மன் கோயில் மற்றும் முக்தீஸ்வரர் கோயில், செல்லூர் திருவாப்புடையார் கோயில், திருவாதவூர் திருமறைநாதர் சுவாமி கோயில் மற்றும் உப கோயில்களின் உண்டியல் திறப்பு நடைபெற்றது.
கோயில் இணை ஆணையர் நா. நடராசன் தலைமையில் கூடலழகர் கோயில் உதவி ஆணையர் மு.ராமசாமி முன்னிலையில் தெற்கு வடக்கு ஆய்வர்கள், பக்தர் பேரவையினர் மற்றும் எஸ்பிஐ ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் உட்பட சுமார் 289 பேர் கலந்து கொண்டனர்.
இதில், ரூ. 97 லட்சம், 830 கிராம் தங்கம், 877 கிராம் வெள்ளி மற்றும் வெளிநாட்டு பணம் 589 எண்ணம் வரப்பெற்றது.

காவல் ஆய்வாளர் மீது நடவடிக்கை

● உயர் நீதிமன்றம் உத்தரவு

■ மதுரை

கோ.புதூரைச் சேர்ந்த மணிமுத்து, உயர் நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனு:
எனது மனைவி சக்திகாளி. அவரை பிரசவத்துக்காக கோ. புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த 14.9.2019-ல் சேர்த்தேன். அங்கு நர்ஸ் உள்ளிட்ட பணியாளர்கள் உரிய சிகிச்சை அளிக்கவில்லை. இதனால் என் மனைவி இறந்தார். எனது மனைவியின் இறப்புக்கு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மற்றும் நர்ஸ் உள்ளிட்ட பணியாளர்களின் கவனக்குறைவே காரணம். எனது மனைவியின் பிரேதப் பரிசோதனை அறிக்கை, இறப்புச் சான்றிதழ் வழங்கவும், ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட் டிருந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி புஷ்பா சத்யநாராயணா பிறப்பித்த உத்தரவு:
இந்த வழக்கில் கோ.புதூர் காவல் ஆய்வாளர் மற்றும் ராஜாஜி மருத்துவமனை பிறப்பு - இறப்பு பதிவாளர் ஆகியோர் தங்களது பணியை முறையாகச் செய்யவில்லை. காவல் ஆய்வாளர் பதில் மனுவில் போதிய விவரம் இல்லை. இதே போல், பதிவாளரும் இறப்பை முறையாகப் பதிவு செய்யவில்லை. அரசுப் பணி என்பது நேர்மையாகச் செயல்பட வேண்டிய துறை. எனவே, ராஜாஜி மருத்துவமனை பிறப்பு-இறப்பு பதிவாளர் தீனதயாளன் மற்றும் கோ.புதூர் காவல் ஆய்வாளர் முத்துக்குமார் ஆகியோர் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
மனுதாரர் மனைவி இறந்தது தொடர்பான வழக்கை வேறொரு அதிகாரிக்கு மாற்ற காவல் ஆணையர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர், 3 மாதத்தில் விசாரித்து உயர் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை ஜூன் முதல் வாரத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சொந்தமான

ரூ.10 கோடி மதிப்புள்ள 1.89 ஏக்கர் நிலம் மீட்பு

■ மதுரை

மதுரை பொன்மேனி சொக்கலிங்க நகரில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்குச் சொந்தமான ரூ. 10 கோடி மதிப்புள்ள 1.89 ஏக்கர் நிலம் நீதிமன்ற உத்தரவுப்படி நேற்று மீட்கப்பட்டது.
மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்குச் சொந்தமான நிலம், மதுரை பொன்மேனி சொக்கலிங்க நகரில் உள்ளது. இங்குள்ள 1.89 ஏக்கர் நிலத்தை சிலர் 30 ஆண்டுகளாக ஆக்கிரமித்து வீடுகள், கடைகளைக் கட்டி அனுபவித்து வந்தனர். கோயில் நிர்வாகம் சார்பில் இடத்தைக் காலி செய்யுமாறு பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், சிலர் இடத்தை காலி செய்யவில்லை. இதுதொடர்பாக கோயில் நிர்வாகம் சார்பில் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் ஆக்கிரமிப்பை அகற்றும்படி உத்தரவிட்டது.
இதையடுத்து, நீதிமன்ற அமீனா இளங்கோவன் முன்னிலையில் கோயில் இணை ஆணையர் நா.நடராஜன் தலைமையில் கோயில் பணியாளர்கள் நேற்று ஆக்கிரமிப்பை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். ஆக்கிரமிப்பு வீடுகள், கடைகள் பொக்லைன் இயந்திரம் மூலம் இடித்து அகற்றப்பட்டன.
பின்னர், வருவாய்த் துறையினர் மற்றும் நில அளவைத் துறையினர் இடங்களை அளந்து வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். எஸ்.எஸ்.காலனி எஸ்ஐ விஜயகுமார் தலைமையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

▲ மதுரை பொன்மேனி சொக்கலிங்க நகரில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்குச் சொந்தமான 1.89 ஏக்கர் நிலத்திலிருந்த வீடுகள், கடைகள் அகற்றப்படுவதை பார்வையிடும் அதிகாரிகள். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

நாளை அறிவியல் படைப்புகளுக்கான போட்டி

■ மதுரை

திருப்பரங்குன்றம் எம்எல்ஏ பா. சரவணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு, திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட அரசு மற்றும் உதவி பெறும் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கான அறிவியல் படைப்புகளுக்கான போட்டி பிப்.28-ம் தேதி நடைபெறுகிறது. இதில், மாணவ, மாணவியரின் அறிவியல் ஆர்வத்தையும், தனித்திறமையையும் வளர்க்கும் வகையில் 50 பள்ளிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பங்கேற்கும் வகையில், அறிவியல் படைப்புகளுக்கான போட்டி பசுமலை சிஎஸ்ஐ ஆண்கள்மேல்நிலைப்பள்ளியில் காலை 11 மணியளவில் நடைபெற உள்ளது.
இதில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியருக்குப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப் படும்.
நிகழ்ச்சியில் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் எம்எல்ஏ, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரா. சுவாமிநாதன், திருமங்கலம் மாவட்டக் கல்வி அலுவலர் இந்திராணி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

▲ ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் பங்கேற்ற மாணவியர்.

யாதவர் மகளிர் கல்லூரியில்

ஷேக்ஸ்பியர் நாடகம் அரங்கேற்றம்

■ மதுரை

மதுரை யாதவா மகளிர் கல்லூரி ஆங்கிலத்துறை சார்பில், 'ஷேக்ஸ்பியரின் ஆண்டனி கிளியோபாட்ரா' நாடகம் நடைபெற்றது.
கல்லூரித் தலைவர் இ.மா. கோ.சௌ. போத்திராஜா, செயலர், தாளாளர் இ.மா.கோ.சௌ. இந்திராணி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்நிகழ்வை 2,600 மாணவ, மாணவியர் பார்வையிட்டனர்.
ஆங்கிலத் துறைத் தலைவர் ச.சிவகாமசுந்தரி பாராட்டி பேசினார். முன்னாள் பேராசிரியர்கள் அழகி கார்மேகவண்ணன், எஸ்.வி. ரேணுகாதேவி, டி. ஜான்சிராணி மற்றும் கங்கா தேவி ஆகியோர் நாடக அரங்கேற்றத்துக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

மதுரையில் 'போக்சோ' சட்டத்தின் கீழ்

குழந்தைகள் ஆபாச படங்களை பரப்பிய லாரி ஊழியர் கைது

■ மதுரை

மதுரை பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு புகார் கடிதம் வந்தது. அதில் குறிப்பிட்டுள்ள விவரம்:
மதுரை ஆரப்பாளையம் சண்முகநாதபுரம் 3-வது தெருவைச் சேர்ந்த நாராயணசாமி மகன் குமார் (40) தனது மொபைல் போனில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக குழந்தைகளின் ஆபாச படங்களை பார்த்ததாகவும், அந்த நபர் தேசிய குழந்தைகளுக்கு எதிரான சுரண்டல் மற்றும் காணாமல் போனவர்கள் விவரங்கள் சேகரிப்பு அமைப்பு என்ற பெயரில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பின் மூலம் குழந்தைகளை ஈடுபடுத்தி எடுக்கப்பட்ட ஆபாசப் படங்களை பதிவிறக்கம் செய்திருப்பதும் தெரிய வந்தது. இந்நிலையில் ஆள் கடத்தல் தடுப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில், உதவி ஆய்வாளர் செல்வகுமாரி விசாரணை நடத்தினார்.
இதில் குமார் தனது மொபைல் போனில் ஓராண்டுக்கும் மேலாக குழந்தைகளின் ஆபாச படங்களை பார்த்துள்ளதும், அவற்றை முகநூலில் பிறருக்கு பகிர்ந்து வந்ததும் தெரியவந்தது. இது தொடர்பாக எஸ்ஐ செல்வகுமாரி கொடுத்த புகாரின்பேரில், மதுரை தெற்கு அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார், குமார் மீது 'போக்சோ' சட்டத்தில் வழக்குப் பதிவு செய்து அவரை தேடுகின்றனர்.

கால்நடை வளர்ப்பு பயிற்சி

■ மதுரை

திருப்பரங்குன்றம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மைய பேராசிரியர் மற்றும் தலைவர் சௌ. சிவசீலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருப்பரங்குன்றம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில், கறவை மாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, நாட்டுக் கோழி வளர்ப்புப் பயிற்சி நடைபெற உள்ளது. இதில் சேர விருப்பமுள்ள விவசாயிகள், சுயதொழில் புரிய விரும்புவோர் 0452 2483903-ல் தொடர்பு கொள்ளலாம்.

நகரில் நடப்பவை

- சவுராஷ்டிரா கல்லூரி: சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு, கல்லூரி வளாகம், காலை 10.30.
- செல்வ விநாயகர் கோயில்: சதுர்த்தி உற்சவ புறப்பாடு, ரயில்வே காலனி, இரவு 7.
- கர்னல் பென்னி குயிக் கல்வி அறக்கட்டளை: மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, பென்னி குயிக் 179 ஆண்டு பிறந்தநாள் விழா, சேதுபதி மேல்நிலைப்பள்ளி, காலை 10.30.
- திருவள்ளுவர் கழகம்: ஆன்மிகச் சொற்பொழிவு, வடக்காடி வீதி, இரவு 7.
- ஆயிரவைசிய கல்லூரி: 286– வது வாசகர் வட்டம், கல்லூரி வளாகம், பிற்பகல் 2.30.
- தமிழிசை சங்கம்; தமிழிசை விழா, ராஜா முத்தையா மன்றம், மாலை 6.45.
- சேர்மத்தாய் வாசன் மகளிர் கல்லூரி: திரைப்படம் உருவாக்கம், இணையதள தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சுக்கிரா, காலை 11.30.
- யாதவா கல்லூரி: மாநில அளவிலான ஹையாசின்த் –2020, காலை 9.

வரி விளம்பரங்கள்

தொழில்
டீலர்கள் தேவை
SONA BELT 3X3 தினம் ரூ.7,500; XXX BELT 3X3 தினம் ரூ.7,500 டெலிவரி ஏஜெண்ட். Ct: 8940589268

பொது
சுற்றுலா
6 நாள் ஷீரடி-மார்ச் 8, 22, 29 பண்டரிபுரம், மந்திராலயம் ஏப். 5,12, 19, 26, மே 3, 10, 17, 24, 31
8 நாள் காசி, கயா-மார்ச் 16,30 அலகாபாத்,- ஏப்.6,13,20,27, மே 4,11,18,25
11 நாள் காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா, அவுரா - ஏப். 17, மே 1, 11, 22
16 நாள் காசி, அயோத்தி-ஏப். 24
16 நாள் நேபாள், முக்தீநாத், காசி ஏப். 19, மே 3,10,17,24, ஜூன் 14
14 நாள் நவஜோதிலிங்கம்-ஏப்.12
15 நாள் பஞ்சதுவாரகா-மார்ச் 10
7 நாள் கேரளா படகு வீடு - மே 18
11 நாள் கேங்டாக், டார்ஜிலிங் ஏப். 8, 15, 22, 29, மே 6, 13, 20, 27
14 நாள் சிம்லா, குளுமணாலி
14 நாள் காஷ்மீர்-மே 5, 14, 23
16 நாள் பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி, யமுனோத்ரி மே 3, 12, 18, 27, ஜூன் 2, 11
9 நாள் இலங்கை | 4 நாள் கோவா
SRINIVASA TOUR, Madurai
8428800025

பொது
சுற்றுலா
காஞ்சி புனித சுற்றுலா
வருகிற 29ஆம் தேதி காலை மதுரையில் இருந்து புறப்பட்டு சமயபுரம், திருவண்ணாமலை, திருத்தணி வழியாக காஞ்சிபுரம் சென்று 2ஆம் தேதி காலை மதுரை திரும்பும் விதத்தில் புனித சுற்றுலா A/c பஸ்ஸில் செல்ல ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. காஞ்சி புரத்தில் காமாட்சி அம்மன் கோவில், காஞ்சி சங்கர மடம், ஓரிக்கை, தேனம்பாக்கம் மற்றும் காஞ்சி வரதராஜ பெருமாள் கோவில் ஆகியவை தரிசிக்க உள்ளோம். ஒரு நபருக்கு உணவு, தங்கும் இடம், பிரசாத பை உட்பட ரூ.3500. வழங்கி முன்பதிவு செய்து கொள்ளவும்.
94426 30815

IRCTC பாரத் தர்ஷன்
ராமாயண யாத்திரை
நாசிக் - ஹம்பி - சித்ரகூடம் - பக்சார் - வாரணாசி - ரகுநாதபுரம் - சீதாமார்ஹி - ஜனக்புரி (நேபாளம்) - அயோத்தி - நந்திகிராமம் - அலகாபாத் - சிருங்காவேர்புர் 05.03.20 (14 நாட்கள்) Rs.15,990/-
இரயில் பயணம், போக்குவரத்து, உணவு, ஹாலில் தங்கும் வசதி, GST உட்பட
90031 40680
90031 40655 / 714

வருந்துகிறோம்!
இரங்கல்
இறப்பு
கண்ணீர் அஞ்சலி
68 years
திருசெங்காட்டங்குடி
திருமதி கோதை சத்தியமூர்த்தி
26.02.2020 அன்று ஆச்சார்யன் திருவடி அடைந்தார்
— தீங்கா அன்புடன் —
குடும்பத்தார்: சத்தியமூர்த்தி ஸ்ரீராம் & அஸ்வினி, சுபா & ரகுநாதன்
கை பேசி: 89395 98375

SBI பாரத ஸ்டேட் பாங்கு
ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை, விநாயக நகர் கிளை முதல் தளம், எண்.8, அம்பேத்கர் சாலை, மதுரை – 625020.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 13(4) (சர்ஃபாசி சட்டம் 2002)–ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனை. சர்ஃபாசி சட்டம் 2002 பிரிவு 13(4)ன் படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள **அசையா** சொத்துக்களின் மீதான கடன் நிலுவைத் தொகையை சர்ஃபாசி சட்டம் 2002–ன் மூலம் மீட்பதற்காக சொத்துக்கள் **"என்ன உள்ளதோ அப்படியே" 'எங்கு உள்ளதோ அந்நிலையிலேயே'** என்ற முறையில் இ–ஏல விற்பனை செய்யப்பட உள்ளது.

கடன்தாரர் பெயர் : **M/s.தேன்ராஜ் ஆஃப்செட் பிரிண்டர்ஸ்**

11/1, அஹிம்சாபுரம் 8–வது தெரு, விசாலம், செல்லூர், மதுரை–625002. உரிமையாளர் : **திரு.C.வேல்ராஜ்,** 71/15D, சத்தியமூர்த்தி 6–வது தெரு, மீனாம்பாள்புரம், மதுரை–625002 மற்றும் காலஞ்சென்ற ஜாமீன்தாரர் **திருமதி.C.மரியம்மாளின்** சட்ட வாரிசுகளான **1) திரு.C.பொன்ராஜ்,** த/பெ.சொக்கலிங்கம், 71/15D, சத்தியமூர்த்தி 6–வது தெரு, மீனாம்பாள்புரம், மதுரை–625002, **2) திரு.C.செல்வராஜ்,** த/பெ.சொக்கலிங்கம், 71/15D, சத்தியமூர்த்தி 6–வது தெரு, மீனாம்பாள்புரம், மதுரை–625002, **3) திரு.C.அன்பழகன்,** த/பெ.சொக்கலிங்கம், 71/15D, சத்தியமூர்த்தி 6–வது தெரு, மீனாம்பாள்புரம், மதுரை–625002, 4)**திருமதி.T.திராவிடச்செல்வி** க/பெ.திரு.தன்ராஜ், 71/15D, சத்தியமூர்த்தி 6–வது தெரு, மீனாம்பாள்புரம், மதுரை–625002, **5) திரு.C.வேல்ராஜ்,** த/பெ.சொக்கலிங்கம், 71/15D, சத்தியமூர்த்தி 6–வது தெரு, மீனாம்பாள்புரம், மதுரை–625002,

விற்பனைக்குள்ள சொத்து மீதான நிலுவைத்தொகை 26.02.2020 தேதிப்படி ரூ. **89,47,810.38** (ரூபாய் எண்பத்தொன்பது லட்சத்து நாற்பத்தேழாயிரத்து எந்நூற்று பத்து மற்றும் பைசா முப்பத்தெட்டு மட்டும்) மேற்படி நிலுவைக்கு மேல் வட்டி + பிற செலவினங்கள்.

கேட்பு அறிவிப்பு 13(2) : 08.10.2012 & சுவாதீன அறிவிப்பு 13(4) : 26.04.2019.

அசையா சொத்து விபரம் : மதுரை மாவட்டம், மதுரை பதிவு மாவட்டம், தல்லாகுளம் சார் பதிவு மாவட்டம், தற்போது சொக்கிகுளம் சார் பதிவு மாவட்டம், மதுரை மாநகராட்சி, சர்வே வார்டு எண்.10, பிந்தைய வார்டு எண்.1, மாநகராட்சி தேர்வு நிலை புதிய வார்டு எண்.4, பீபீகுளம் கிராமம், சேகரம், மீனாம்பாள்புரம், T.S.எண்.1740 & 1741/1–ல் உள்ள நிலம் பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு, அதில் பிளாட் எண்.3, இதில் வடக்கு போர்ஷனில் 6–1/2 சென்டுகள் மனை மற்றும் வீட்டின் கதவு எண்.15C & 15D, வார்டு எண்.19. நான்கு மால் :– வடக்கே : T.S.எண்.1740–ல் மாரியப்பகோன் விற்ற வீடு, தெற்கே : T.S.எண்.1740 & 1741/1–ல் செல்லம்மாள் வாங்கிய வீடு, கிழக்கே : T.S.எண்.1739/3–ல் சுந்தரராஜன் வகையறா மனை, மேற்கே : T.S.எண்.1748/3–ல் ஷண்முக வடிவு அம்மாள் கோட்டம் மற்றும், T.S.எண்.1749/1–ல் மாரியப்பன் வீடு. இதற்குள் 10 அடி அகல பரப்பு சாலைப் பங்கும் சேர்த்து கிழமேல் வடக்கே 112 அடி, தெற்கே 108 அடி, தென்வடல் மேற்கே 25 அடி, கிழக்கே 26–1/2 அடியில் அனைத்து வசதிகளையும் கொண்ட சொத்தின் உரிமையாளர் : காலஞ்சென்ற **திருமதி.C.மரியம்மாள்.**

நிர்ணய விலை ரூ. **51,10,000/-** (ரூபாய் ஐம்பத்தொன்று லட்சத்து பத்தாயிரம் மட்டும்)
முன் வைப்பு ரூ. **5,11,000/-**(ரூபாய் ஐந்து லட்சத்து பதினொன்றாயிரம் மட்டும்) ஏலக் கேட்பு மடங்கு ரூ. **50,000/-**

இ–ஏல தேதி மற்றும் நேரம் : 30.03.2020 பகல் 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.
(விற்பனை முடியும் வரை 5 நிமிட தானியங்கி கால நீட்டிப்புடன்)

(EMD) 10% முன் வைப்புத் தொகை செலுத்தும் முறை: பாரத ஸ்டேட் பாங்கு, எண்.8, டாக்டர் அம்பேத்கர் ரோடு, விநாயக நகர் கிளை முதல் தளம், மதுரை–625020, **SBI** பார்க்கிங் கணக்கு எண். **38676668762** கிளை கோடு : 01479, **IFSC Code No.SBIN0001479**-ல் ஏலக்குறியீடுகள் சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே மின்னணு (EFT/RTGS/NEFT) மூலம் பணப்பரிமாற்றம் செய்யப்பட வேண்டும் அல்லது **பாரத ஸ்டேட் பாங்கு** ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மீட்பு கிளை, மதுரை என்ற பெயரில் ஏதேனும் தேசிமயமாக்கப்பட்ட வங்கியிலோ அல்லது ஷெட்யூல்டு வங்கி வரைவோலையாகவோ செலுத்தலாம்.
முன்வைப்புத் தொகை & KYC ஆன்லைனில் சமர்ப்பிக்க கடைசி தேதி / நேரம் : **27.03.2020** அன்றோ அதற்கு முன்பாகவோ **காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.** சொத்துக்களைப் பார்வையிட நாள் / நேரம் : **26.03.2020 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.** தொடர்புக்கு **0452 – 2531047.**

இந்த இ–ஏல விற்பனையானது **"என்ன உள்ளதோ அப்படியே" 'எங்கு உள்ளதோ அந்நிலையிலேயே'** என்ற முறையில் ஆன்–லைன் மூலம் நடத்தப்படும். இந்த ஏல விற்பனையானது, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை அளிப்பவர்களான **M/s. e-Procurement Technologies Ltd (ETL)** மூலம் இணையதளம் **https://sbi.auctiontiger.net** வாயிலாக நடத்தப்படும். இது சம்பந்தப்பட்ட ஆவணங்கள், இன்ன பிற தகவல்கள், நிபந்தனைகள் மற்றும் விதிகள் அனைத்தும் பின் வரும் இணையதள முகவரி மூலம் அறியலாம். **1) https://sbi.auctiontiger.net 2) https://www.sbi.co.in** வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை அளிப்பவர்களின் இணையதள முகவரிகள் :- **praveen.thevar@auctiontiger.net, rikin@auctiontiger.net & support@auctiontiger.net** வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அறிந்தவரையில் மேற்கண்ட சொத்துக்களில் எந்த வில்லங்கமும் காணப்படவில்லை. என்ற போதிலும், இந்த ஏலத்தில் பங்கு கொள்ளவிரும்பும் ஏலதாரர்கள் அவர்களுடைய சொந்த செலவிலேயே சொத்து சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களையும் ஏல விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கு முன்னதாகவே அறிந்து கொள்ள வேண்டும்.வெற்றி பெற்ற ஏலதாரர்கள் விற்பனை மீதான 25% தொகையை உடனடியாக செலுத்த வேண்டும் மீதமுள்ள 75% தொகையை 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். இந்த விளம்பர ஏல விற்பனை அறிவிப்பானது வங்கியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதனை அறியவும். இந்த சொத்துக்கள் தற்போதைய வில்லங்கங்கள் மற்றும் எதிர்கால வில்லங்கங்களுடனேயே விற்கப்படுகிறது. வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஏலதாரர்களின் செலவுகளுக்கும் மற்றும் மூன்றாம் நபர் செலவுகளுக்கும், இன்ன பிற நிலுவைகளுக்கும் பொறுப்பாகமாட்டார். இந்த இ–ஏல விற்பனை அனைத்துமே சர்ஃபாசி சட்டம் 2002–க்கு கட்டுப்பட்டதாகும். சர்ஃபாசி சட்டம் 2002 விதி 6 (2) &8 (6)–ன் கீழ் மேற்கண்ட கடன்தாரர்(கள்) ஜாமீன்தாரர்(கள்) அடமானதாரர்(கள்) இந்த அறிவிப்பினை 30 நாட்கள் சொத்து விற்பனை அறிவிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

நாள் : 26.02.2020.
இடம் : மதுரை.

அங்கீகாரம் பெற்ற அதிகாரி,
பாரத ஸ்டேட் பாங்கு, ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை, மதுரை.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை
பொதுப்பணித்துறை / கட்டட அமைப்பு இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு / ஒப்பந்த முறை : சி படிவம் – இன விலை முறை குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 17 / 2019–20 / கட்டட (க & ப) வட்டம் / திருச்சி / நாள் : 24.2.2020
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் மற்றும் அவரது சார்பாக கண்காணிப்புப்பொறியாளர், பொ.ப.து. கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருச்சி அவர்களால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிட